**SC 33 of 2024**

Date : 21.02.2025.

அ.சா.1 : சுரேஷ்

அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

சம்பவ காலத்தில் நான் இரும்பு கடையில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். வேலைக்கு காலையில் 6 மணி அல்லது 7 மணிக்கு சென்று விட்டு மாலை 6 முதல் 9 மணிக்குள் வருவேன். எப்போதும் ஒருமாதிரி வரமாட்டேன். பாலசுப்பிரமணியன் டீக்கடையில் வைத்துதான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். பாலசுப்பிரமணியின் டீக்கடை மூன்று ரோடுகள் சந்திக்கும் முச்சந்தியில் உள்ளது என்றால் சரிதான். பாலசுப்பிரமணியன் டீக்கடைக்கு எதிரே செல்லும் ரோடுதான் தென்னவநேரிக்கு செல்லும் ரோடு என்றால் சரிதான். தென்னவநேரிக்கு எதிரே செல்லும் ரோட்டுக்கு கிழக்கேதான் ஊரணி ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த ஊரணியை தாண்டி கிழக்கு பக்கம்தான் எதிரி வீடு உள்ளது என்றால் சரிதான். பாலசுப்பிரமணியன் கடைக்கு எதிரே உள்ள வடக்கில் இருந்து தெற்காக செல்லும் ரோடு தென்னவநேரியில் இருந்து மூலைக்கரைப்பட்டி செல்லும் ரோடு என்றால் சரிதான். மேற்படி டீக்கடைக்கு மேற்கில் இருந்து கிழக்காக செல்லும் ரோடு செண்பகராம நல்லூர் செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய ரோடு தார்சாலை என்றால் சரிதான். அது 20 அடி அகலமுள்ள ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் நான் கிழக்கில் இருந்து மேற்கு பார்த்து வரும் போது சம்பவம் நடந்தது. செண்பகராமநல்லூர் தார் சாலை ரோடு வாகனங்கள் அதிகம் வரக்கூடிய மக்கள் நடமாட்டம் கூடிய ரோடு என்றால் சரிதான். கிழக்கில் இருந்து மேற்கு பார்த்து வரும் போதுதான் எதிரி இரு சக்கர வாகனத்தில் வந்து என் வாகனத்தின் எதிரில் நிறுத்தினார் என்றால் சரியல்ல. என் வாகனத்திற்கு பின்னால் இருந்து வந்து முன்னாடி நிப்பாட்டினார். எதிரி என் வண்டிக்கு இடது பக்கம் நிப்பாட்டினாரா அல்லது வலது பக்கம் நிப்பாட்டினாரா என்றால் நடு ரோட்டில் நிப்பாட்டினார். எதிரி என் வண்டியின் வலது இடது கண்ணாடியை உடைத்து அந்த கண்ணாடி துகள்கள் ரோட்டிலும் கிடந்தது என் வாகனத்திற்குள்ளேயும் இருந்தது. எதிரி என் வாகனத்தின் கண்ணாடியை மட்டும்தான் உடைத்தார். வேறு எந்த சேதமும் ஏற்படுத்தவில்லை. கம்பாலும், கையாலும் உடைத்தார். கம்பாலும் கையாலும் உடைத்தார் என்றவிவரத்தை நான் போலிசார் விசாரணையில்

சொல்லியுள்ளேன். எதிரிக்கு எந்த காயமும் ஏற்படவில்லையா என்றால் ஏற்படவில்லை. என் கண்ணில் அடிபட்டது. எனது வலது கண்ணில் பட்டது. எதிரிக்கு பட்டதா என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடக்கும் போது சம்பவ இடத்தில் 4, 5 பேர்கள் இருந்திருப்பார்கள். சம்பவம் 1/2 மணிநேரம் நடந்திருக்குமா என்றால் 15 நிமிடம் நடந்திருக்கும் . சம்பவம் நடந்த உடனே புகார் கொடுத்தேனா என்றால் மறுநாள்தான் புகார் கொடுத்தேன். புகார் மனுவை நான் என் கைப்படதான் எழுதி கொடுத்தேன். போலிசாரிடம் கேட்டுவிட்டு காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன். காவல் நிலையத்திற்கு நான் மட்டும் பைக்கில் சென்றேன். என் அப்பா பின்னாடி வந்து கொண்டிருந்தார். காவல் நிலையத்திற்கு நான் சென்றுவிட்டு வெளியே வந்த பின்பு என் அப்பா வந்தார். என் வாகனம் சேதம் அடைந்துவிட்டது என்று நான் சொல்லியிருப்பதில் அதை காவல் நிலையம் கொண்டு சென்றேனா என்றால் மாலையில் எடுத்து சென்றேன். அப்போது என் வாகனத்தில் எந்தெந்த கண்ணாடி உடைந்துள்ளது என்று குறித்து வைத்து புகைப்படம் எடுத்து வைத்துக்கொண்டார்கள். எனக்கு கண்ணில் ஏற்பட்ட காயத்திற்கு வீட்டில் உள்ள காப்பி பொடியை வைத்து மருந்து போட்டுக்கொண்டேன். கண்ணில் காப்பி பொடியை வைத்து மருந்து போட்டுக்கொண்ட விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுத்து எதிரியை எப்போது காவல் நிலையம் அழைத்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரிக்கு தென்வநேரி ஊரில் சொந்த வீடு நிலங்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் அந்த ஊரில் வீடு , நிலம் இருந்ததா என்றால் இடம் இருந்தது. இடம் எங்கு இருந்தது என்றால் அம்மன் கோவில் பக்கத்தில் பால்வாடி பின்புறம் இருந்தது. எனக்கு சொந்த ஊர் திருச்செந்தூர் அருகே உள்ள குரும்பூர் என்றால் என் சொந்த ஊர் தென்னவ நேரி பிழைப்பிற்காக குரும்பூர் சென்றோம். எதிரியின் வீட்டிற்கு எதிரே ஒரு பொது இடம் உள்ளது என்றால் சரிதான். எதிரியிடம் பொது இடத்தை என்னுடைய இடம் என்று நான் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் பிரச்சனை செய்யும் போது எதிரி என்னிடம் பொது இடத்தை எனக்கு சொந்தமான இடம் என்று எப்படி சொல்லலாம் என்று எதிரி என்னிடம் வாக்குவாதம் செய்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் இடப்பிரச்சனை இருந்தது என்று நான் சொல்லியிருப்பதில் அது எந்த இடம் என்றால் எனக்கு அது தெரியாது. அப்பா காலத்தில் அப்பாவிற்கு தெரியும். வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு 3 மாதத்திற்கு முன்பு நான் எதிரியை தாக்கியதாக ஒரு வழக்கு

உள்ளது என்றால் வழக்கு இல்லை. ஆனால் காவல் நிலையம் சென்றோம். புகார் மனு பேசி முடிக்கப்பட்டது. எதிரி என் மீது புகார் மனு கொடுத்ததையும், பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவிடாமல் தடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு அவர் மீது உள்ள முன்விரோதத்தில் நான் என் வாகனத்தில் வரும் போது எதிரி என்னை வழிமறித்து என் வாகனத்தின் கண்ணாடியை உடைத்ததாகவும் என்னை காயப்படுத்தியதாகவும் பொய்யாக புகார் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி என்னை தாக்கி காயம் ஏற்படுத்தியிருந்தால் நான் மருத்துவமணைக்கு சென்று சிகிச்சை எடுத்திருப்பேன் என்றும் எனக்கு காயம் ஏற்படாததால்தான் நான் மருத்துவமணைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி சொன்ன நேரத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி தாக்கி எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது உள்ள முன்விரோதத்தால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SC 33 of 2024**

Date : 21.02.2025.

அ.சா.2 : பொன் துரை

<u>அ.சா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

சம்பவ காலத்தில் நான் பாத்திரவியாபாரம் செய்தேன். ஆர் எஸ் சுப்பிரமணியன் டீக்கடைக்கு எந்த பக்கம் வைத்து சம்பவம் நடைபெற்றது என்றால் கிழக்கு மேற்கு ரோட்டில் நடைபெற்றது. சுரேஷ் அவர் வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு பார்த்து வந்தார். எதிரி எதிர்புறம் கிழக்கில் இருந்து மேற்கு பார்த்து வந்தார் என்றால் சரிதான். எதிரி சுரேஷ் வாகனத்தை அடித்து உடைத்தார் என்று சொல்லியிருப்பதில் எந்த பக்கம் வண்டியை நிறுத்தியிருந்தார் என்றால் நடு ரோட்டில் நிறுத்தியிருந்தார். சம்பவம் நடந்த எவ்வளவு நேரத்தில் போலிசார் சம்பவ இடம் வந்தார்கள் என்றால் போலிசார் வரவில்லை. தகவல் கூறினார்களா என்றால் தகவல் கூறவில்லை. சுரேஷ் சம்பவம் நடந்த அன்றே புகார் மனு கொடுப்பதாக கூறிவிட்டு சென்றார். முதல் விசாரணையில் கண்ணாடியை எதிரி உடைத்தார் என்று சொல்லியிருப்பதில் எதை வைத்து உடைத்தார் என்றால் கையை வைத்து உடைத்தார். வாதி சுரேஷ் - வலது கண்ணின் மேல் பகுதியில் காயம் ஏற்பட்டது. வாதி சுரேஷ் எனது உறவினர் ஆவார். நான் சொன்ன தேதி சொன்ன விதத்தில் மேற்படி சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியால் வாதி சுரேஷ் என்பவருக்கு காயம் ஏற்படவில்லை என்றால் காயம் ஏற்பட்டது. சம்பவம் ஒரு 1/2 மணி நேரம் நடந்திருக்குமா என்றால் 10 நிமிடம் நடந்திருக்கும். சம்பவத்தை என்னை சேர்த்து மொத்தம் 3 நபர்களதான் இருந்தார்கள். போலிசார் என்னை மறுநாள் வந்து விசாரணை செய்தார்கள். மறுநாள் காலை என்னை 10 to 11 மணியளவில் என்னை விசாரணை செய்தார்கள். அ.சா.1 சுரேஷ் என்பவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.